தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் - 2022

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை ள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந் ்து செயற்படுவதறக் ான அதன் ஆறற் லினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தால வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமா உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கைகணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழகூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச ் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும்பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும்உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.முடியுமான அளவு மற்றும் தேவையான

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,
- ஏதேனும் பொருத்தமான எழுத்து மூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேடஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,
- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் கட்டிட தேய்மானம் ரூபா 20,342,437 ஆகக் காண்பிக்கப்பட்ட போதும் பயனுள்ள ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்ட தேய்மானம் ரூபா 20,234,046 ஆனதில் கட்டிட தேய்மானம் ரூபா 108,791 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுப்பதாக. | தேய்மானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.5.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | விடயம் | நிதிக்கூற்றுக்கள் பிரகார பெறுமதி | நேரொத்த அறிக்கை பிரகார பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (i) | மோடார் வாகனம் | 10,200,838 | 10,196,250 | 4,588 | 2023 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுப்பதாக. | இணக்கமின்மையை இனங்கண்டு கணக்கு மீதியை சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கட்டிடம் | 618,017,936 | 618,330,331 | 312,395 | | |
| (iii) | நுலக புத்தகம் | 3,120,441 | 3,143,884 | 23,443 | | |
| (iv) | நுலக புத்தகம் திரண்ட தேய்மானம் | 2,536,946 | 2,554,766 | 17,820 | | |
| (v) | மோடார் வாகன திரண்ட தேய்மானம் | 3,640,952 | 3,951,365 | 310,413 | | |
| | | **637,517,113** | **638,176,596** | **668,659** | | |

**1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| விடயம் | தொகை | சமர்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| வெட் வரி மீதி | 33,026,774 | மீதி உறுதிப்பாடு | 2015 ஆண்டு வரை வெட் வரி கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான அறிக்கையை பெற்று சமர்பிப்பதாக. | மீதியை உறுதிப்படுத்த தகவல்கள் சமர்பிக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய 06 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,405,728 ஆனதுடன் அவற்றில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டிற்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 256,258 தொகை மற்றும் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 796,962 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேலும் அறவிட வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய மீதிகளை அறவிட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று கூட்டுத் தொகை ரூபா 11,468,279 ஆன 09 கடன்கொடுனர் மீதிகளை தீர்த்திருக்கவில்லை. | கேட்போர்கூட நிர்மாணத்திற்கு செலுத்த வேண்டியுள்ள தொகைக்காக ஏற்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்யுள்ளதுடன் ஏனைய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கு இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2001 இன் 01 இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் (இஸ்தாபிக்கப்பட்ட) சட்டத்தின் 04 ஆம் பிரிவு | நிறுவனத்தின் நோக்கமான கூட்டுறவின் அபிவிருத்திக்கான செயற்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் கூட்டிணைப்பு, நவீன தொழிநுட்பத்தின் மூலம் பயிற்சி வழங்கல், கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான ஆராயச்சிகளை மேம்படுத்தல், நிபுணத்துவம் தேவைப்படும் கூட்டுறவை முகாமை செய்தல், தொழிற்துறை ரீதியான ஆலோசனை | பிரதான நோக்கத்தை அடைந்துள்ளதுடன் முன்மாதிரி கூட்டுறவு கிராமம் மற்றும் வியாபார மத்திய நிலையம் அமைத்தல் பிரச்சினையாக இருப்பதால் சட்டத்தின் திருத்தமொன்றாக அகற்ற பிரேரிக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் அனைத்து நோக்கங்களையும் அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கல் மற்றும் முன்மாதிரி கூட்டுறவு கிராமம் மற்றும் வியாபார மத்திய நிலையம் அமைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | | |
| (ஆ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1 (இ) வழிகாட்டி | தகைமை பெற்ற ஆர்வம் உள்ள தரப்பினரிற்கு பெறுகையிற்கு சமுகமளிக்க நியாயமான, சாதாரண மற்றும் உச்ச சந்தர்ப்பத்தை வழங்காது தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு மாத்திரம் அலவுத் திட்டத்தை முன்வைத்து போட்டியின்றி ரூபா 1,618,400 ஆன 08 மடிக்கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | மணுக் கோரல் அறிவித்தல் நிறுவனத்தில் பதிவு செய்த 05 வழங்குனர்கள் உள்ளிட்ட 10 வழங்குனர்களிற்கு தபால் மூலம் அனுப்பியுள்ளதாக. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை பின்பற்ற வேண்டியதுடன் பதிவுத் தபாலை பயன்படுத்த வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 5,547,435 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 941,564 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,605,871 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. ஆண்டின் வருமானம் 22 சதவீத்தால் அதிகரித்திருந்த போதும், மீண்டுவரும் செலவினம் 26 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| உள்நாட்டு வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சினால் 2015 மற்றும் 2020 ஆண்டுகளிற்கு வழங்கியுள்ள 2 மோடார் வண்டிகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2 மோடார் வண்டிகளை சுவீகரிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் விரைவில் சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதாக. | வாகனங்களின் உரிமையை சுவீகரித்துக் கொள்ள வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஜுலை 31 திகதிய முகாமைத்துவ சபை தீர்மானத்தின் பிரகாரம் உள்ளக விரிவுரையாளர் ஒருவர் மாதத்திற்கு குறைந்தது 60 மணித்தியாலங்கள் பணியாற்ற வேண்டிய போதும் 10 விரிவுரையாளர்கள் மீளாய்வாண்டு சனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலத்தினுள் மாதத்திற்கு 60 மணித்தியாலத்திலும் குறைவாக விரிவுரை நிகழ்த்தியிருந்ததுடன் 03 விரிவுரையாளர்கள் 02 மாதங்களினுள் மற்றும் ஒரு விரிவுரையாளர் ஒரு மாதத்தினுள் ஒரு விரிவுரையை ஏனும் நிகழ்த்தி இருக்கவில்லை. | புதிய விரிவுரையாளர்களை மாற்றீட்டு சேவைக்காக பயன்படுத்த சந்தர்ப்பம வழங்கியுள்ளதால் குறைந்தபட்ட விரிவுயை மணித்தியாலங்களை பூரணப்படுத்த முடியாதுள்ளதுடன் தற்போது அனைத்து விரிவுரையாளர்களையும் குறைந்தபட்ட விரிவுரை மணித்தியால அளவை ஈடுசெய்யும் வகையில் நேரசூசி தயாரிக்கப்பட்டு விரிவுரையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாக. | முகாமைத்துவ சபை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |